செ.வெ.எண்: 270/2020 நாள்: 24.06.2020

# பத்திரிகைச் செய்தி

திருவண்ணாமலை மாவட்டத்தில் கொரோனா நோய் தொற்று பரவாமல் இருக்க மாவட்ட நிர்வாகத்தால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது,வெளிநாடு,வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கொரோனா தொற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதிக அளவில் பரிசோதனைகள் மேற்கொள்வதன் முலமாக மட்டுமே நோய் தொற்று அறிந்தவர்களை கண்டறிந்த தனிமைபடுத்தும் போது நோய் தொற்று மேலும் அதிகளவில் பரவாமல் தடுக்க இயலும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அரசு திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, 10 அரசு மருத்துவமனைகள் மற்றும் 18 வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் என கீழ்கண்ட 29 மையங்களில் காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை கொரானோநோய் தொற்று பரிசோதனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

1. திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
2. அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, செய்யாறு
3. அரசு மருத்துவமனை, ஆரணி,
4. அரசு மருத்துவமனை, செங்கம்
5. அரசு மருத்துவமனை, போளுர்
6. அரசு மருத்துவமனை, தானிப்பாடி,
7. அரசு மருத்துவமனை, வந்தவாசி
8. அரசு மருத்துவமனை, கலசப்பாக்கம்
9. அரசு மருத்துவமனை, சேத்பட்டு
10. அரசு மருத்துவமனை, தண்டராம்பட்டு
11. அரசு மருத்துவமனை, வெம்பாக்கம்
12. காட்டாம்பூண்டி வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
13. வாணாபுரம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
14. மேல்பள்ளிப்பட்டு வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
15. காரப்பட்டு வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
16. ஜமுனாமரத்தூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
17. கொம்மனந்தல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
18. களம்பூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
19. கடலாடி வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
20. மங்கலம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
21. கீழ்பென்னாத்தூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
22. ச.வி.நகரம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
23. தச்சூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
24. நாவல்பாக்கம் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
25. பெருங்கட்டுர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
26. ஆக்கூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
27. வழூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
28. தெள்ளார் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்
29. கொழப்பலூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம்

எனவே, சளி, இருமல், காய்ச்சல், மூச்சுத்திணறல் ஆகிய அறிகுறிகள் இருந்தால் தங்களுக்கு அருகாமையில் உள்ள கொரோனா நோய் தொற்று பரிசோதனை மையத்தில் பரிசோதனை செய்துகொள்ளுமாறு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.சு.கந்தசாமி.இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை.**